# 10

# கிறிஸ்து: சர்வலோக நியாயாதிபதி

*இயேசு தொழுவத்திலிருக்கும் குழந்தையாக ... நாசரேத்தில் வளரும் சிறுபையனாக ... உணர்ச்சிமிக்க ஒரு பிரசங்கியாராக அவருடைய பிரசங்கத்தைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் கூட்டங்கூட்டமாக ... அநேகருடைய வியாதிகளை குணமாக்கி பிசாசுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஒருவராக, ... பாவிகளுக்கு சிநேகிதராகவும் துக்கம் நிறைந்தவராகவும் ... அன்பும் இரக்கமும் நிறைந்த இரட்சகராக ... சிலுவையில் மரித்த ஒருவராக, அடக்கம் பண்ணப்பட்டவராக, பின்பு மரித்தோரிலிருந்து எழுந்தவராக ... பரலோகத்துக்கு ஏறிப்போன தேவனுடைய குமாரனாக சித்தரிக்கப்படுகிறார். அதே இயேசு மறுபடியும் வருவார் - அவர் வரும்போது, உலகத்தை நியாயந்தீர்ப்பார்.*

## கிறிஸ்து நியாயாதிபதியாக இருப்பார்

*யோவான் 12:46-48ல் இயேசு உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்பது மறுதலிக்கப்படுவது போல தெரிகிறது:*

> *"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு நான் உலகத்தில் ஒளியாய் வந்தேன். ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை: நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்."*

*எப்படியிருப்பினும், இயேசு, "நான் உலகத்தை நியாயந்தீர்க்க வரவில்லை" என்று சொன்னவுடனே, தொடர்ந்து அவர் ஜனங்கள் தாம் சொல்லிய வசனத்தைக் கொண்டு நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்றும் சொன்னார். அநேகமாக, இயேசு இதைப்போல சொல்லிக்கொண்டிருந்தார்: "நான் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி வரவில்லை. மாறாக, நான் உலகத்தை இரட்சிக்கவே வந்தேன்; ஆனால் என்னையும் என் வார்த்தைகளையும் புறந்தள்ளுகிற ஜனங்கள் அந்த வார்த்தைகளைக் கொண்டே நியாயந்தீர்க்கப் படுவார்கள்." இயேசு மனிதர்களை நியாயந்தீர்க்கிற விஷயத்தில் தமக்கு பங்கில்லை என்று சொல்லவில்லை என்று நமக்குத் தெரியும், ஏனெனில் மற்றொரு இடத்தில் அவர், "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்றார் (யோவான் 5:22).*

*மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் சுவிசேஷகர்களும் கிறிஸ்து நமது நியாயாதிபதியாக இருப்பார் என்று சொன்னார்கள். "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: ... திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு" என்று பவுல் எழுதினார் (2 தீமோத்தேயு 4:1, 2ஆ). 2 கொரிந்தியர் 5:10ஆ வில் அவர் "இயேசுவின் நியாயாசனத்தைக் குறித்துப்" பேசினார்.*

*நடபடிகள் 17:30, 31ல், அத்தேனே பட்டணத்து ஜனங்களிடம் பவுல் சொன்னார்,*

> *அறியாமையுள்ள காலங்களைத்தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார், மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்.*

*மத்தேயு 25:31-46ல் இயேசுவின் வார்த்தைகள் மிகவும் ஆர்வமிக்கவைகள்:*

> *அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபுறத்திலும் நிறுத்துவார்.*
>
> *அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்கு போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னை சேர்த்துக் கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாய் இருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்" என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: "ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மை பசியுள்ளவராகக் கண்டு உமக்கு போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக் கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம்" என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான*

*இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பார்.*

*அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்கு போஜனங் கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை. அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னை சேர்த்துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை" யென்பார். அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: "ஆண்டவரே, உம்மை பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும் வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப் பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவி செய்யாதிருந்தோம்" என்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: "மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பார். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.*

*நேர்மையான மனதுடன் இந்த வசனங்களை வாசிக்கிற எந்த நபரும் பெரிதான நாளான கடைசி நாளிலே, இயேசு கிறிஸ்து வரும்போது, அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்ற முடிவுக்கே வருவார்!*

## கிறிஸ்து சகல மனுஷரையும் நியாயந்தீர்ப்பார்

*அவர் வரும்போது, "சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப் படுவார்கள்" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 25:32). யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் நியாயத்தீர்ப்பு காட்சியை பதிவு பண்ணும் போது, அவர், "மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்" என்று எழுதினார் (வெளிப்படுத்தின விசேஷம் 20:12அ). "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்கபலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" என்று பவுல் எழுதினார் (2 கொரிந்தியர் 5:10; வலியுறுத்தல் என்னுடையது).*

***அவருடைய வார்த்தைகளால்***

*கிறிஸ்துவின் வார்த்தைகளைக்கொண்டு ஜனங்கள் நியாயந்தீர்க்கப் படுவார்கள் (யோவான் 12:48). வெளிப்படுத்தின விசேஷம் 20ல் விவரிக்கப்படும் நியாயத்தீர்ப்பு நாளில், "புஸ்தகங்கள் திறக்கப்பட்டன" (20:12). நியாயத்தீர்ப்பு நாளில் ஜனங்கள் கூடிவந்திருக்கும் போது திறக்கப்படும் புஸ்தகங்களில் ஒன்று புதிய ஏற்பாடாக இருக்கும். வேதம் சொல்லுகிறபடி நம்மிலே ஒவ்வொருவரும்*

*நியாயந்தீர்க்கப்படுவோம் - நம்முடைய சொந்தக் கருத்துக்களின் அடிப்படையிலோ, அல்லது கண்ணோட்டத்தின் அடிப்படையிலோ, மற்றவர்களின் கருத்துக்கள் அடிப்படையிலோ, அல்லது சபையின் சுய சட்டதிட்டங்களின் அடிப்படையிலோ அல்லது மனிதரால் இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையிலோ அல்ல. ஆகையால், மனுஷருடைய பாரம்பரியங்களைப் பின்பற்றிப் போகாமல், கிறிஸ்துவின் சித்தத்தையே பின் பற்றிப் போகிறோம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வோமாக!*

**நமது கிரியைகளுக்குத் தக்கதாக**

நியாயத்தீர்ப்பு என்பது ஜனங்கள் என்ன செய்தார்களோ அதன் அடிப்படையில் இருக்கும் என்று வேதம் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 20:12, 13 சொல்லுகிறது,

> மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் *தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக* நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் *தங்கள் தங்கள் கிரியைகளின்படியே* நியாயத்தீர்ப்படைந்தார்கள் (வலியுறுத்துதல் என்னுடையது).

நியாயத்தீர்ப்பு நாளில் ஒவ்வொருவரும் தங்களின் "சரீரத்தில் செய்த கிரியைகளுக்குத் தக்கதாக பலன் அடைவார்கள்" (2 கொரிந்தியர் 5:10ஆ). இயேசு பயன்படுத்திய உதாரணம் ஒருவர் பசியுற்றோருக்கு உணவளித்து, வஸ்திரம் இல்லாதோருக்கு வஸ்திரம் கொடுத்து, வியாதிப்பட்டவர்களுக்கு கவனம் செலுத்தி இப்படியாக செய்தாரா செய்யவில்லையா என்பதன் அடிப்படையில்தான் நியாயத்தீர்ப்பு இருக்கும் என்று சுட்டிக்காட்டுகிறது.

எல்லோரும் ஒரே மாதிரியாக நியாயந்தீர்க்கப்படுவார்கள். "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (நடபடிகள் 10:34), எனவே நியாயத்தீர்ப்பு நாளில் பட்சபாதம் காட்டப்பட மாட்டாது. சிறியோரும் பெரியோரும் ஒரே அளவின் நிலையில்தான் கணக்கொப்புவிக்கிறவர்களாக நிற்பார்கள்! நீங்கள் ஏதோ "விசேஷமானவர்" என்றும் இரட்சிக்கப்படுவதற்கு மற்ற எல்லாரும் செய்கிற காரியங்களை நீங்கள் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் நினைக்கும்படி வழிநடத்தப் பட்டிருப்பீர்களானால் நீங்கள் மறு சிந்தனை செய்வது நலம்!

சிலர் தங்களுடைய நடத்தை முக்கியமல்ல என்று இன்று சிந்திக்கிறார்கள் - நாம் அவரை விசுவாசிக்கிறோமா இல்லையா என்பது தான் கிறிஸ்துவுக்கு முக்கியம் என்பர். உண்மையென்னவெனில் நமது செயல்களும், நமது கிரியைகளும் முக்கியமானவைகள்! நாம் விசுவாசிப்பது என்ன என்பதன் அடிப்படையில் மாத்திரம் அல்ல, நாம் செய்தது என்ன என்ற அடிப்படையிலும்தான் நியாயந்தீர்க்கப்படுவோம்!

நியாயத்தீர்ப்புக்கான அடிப்படைகள், கிறிஸ்து என்ன போதித்தாரோ, புதிய ஏற்பாடு வெளிப்படுத்துபவைகள் எவைகளோ அவைகளையும்,

*அதேபோல நாம் செய்தவைகள் என்னவோ அவைகளையும் அடிப்படையாகக் கொண்டது. இவை ஒன்றுக்கொன்று எப்படி தொடர்புடையவை? இதற்குரிய பதில் தெளிவானது: நாம் என்ன செய்திருக்கிறோமோ அதை புதிய ஏற்பாட்டு போதனையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். கிறிஸ்துவின் போதனைகளுக்கு நாம் கீழ்ப்படியாமலிருந்தால், பிறகு பயங்கரமான அந்த வார்த்தைகள் நமக்குச் சொல்லப்படும் "என்னை விட்டு அகன்று போங்கள் ..." (மத்தேயு 7:23; 25:41; லூக்கா 13:27).*

## *கிறிஸ்துவின் தீர்ப்பு பிரதிபலனிலோ ஆக்கினையிலோ முடிவாகும்*

*மத்தேயு 25ன்படி, நியாயத்தீர்ப்பு நாளில் சிலர், "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லப்படுவார்கள் (வசனம் 34). மற்றவர்களிடத்திலே ராஜா சொல்லுவார், "சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (வசனம் 41). சபிக்கப்பட்டவர்கள் "நித்திய ஆக்கினைக்கும், நீதிமான்கள் நித்திய ஜீவனுக்கும்" போவார்கள் என்று இயேசு விளக்கமளித்தார் (வசனம் 46). ஆகையால் நியாயத்தீர்ப்பின் விளைவு, ஒன்று நித்திய ஆக்கினையாக இருக்கும் அல்லது நித்திய ஜீவனாக இருக்கும்!*

*வெளிப்படுத்தின விசேஷம் 20ல் பேசப்படும் நியாயத்தீர்ப்புக் காட்சியில் "ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக" காணப்படாதவன் எவனோ அவன் "அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்," அது "இரண்டாம் மரணம்" (வெளிப்படுத்தின விசேஷம் 20:14, 15). நியாயத்தீர்ப்பு நாளிலே சிலர் "ஜீவப் புஸ்தகத்திலே" எழுதப்பட்டவர்களாக காணப்படுவார்கள், அவர்கள் நித்திய ஜீவனை அனுபவிப்பார்கள். மற்ற அனைவரும் "அக்கினிக் கடலிலே" தள்ளப்படுவார்கள், அது இரண்டாம் மரணம், பிற இடங்களிலே அது "நரகம்" என்று அழைக்கப் படுகிறது!*

*இந்த நியாயத்தீர்ப்பின் இரண்டு முடிவுகளும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான இரண்டு காரணங்கள். ஒரு பக்கம், எபிரெயர் 9:28 சொல்லுகிறது, கிறிஸ்து "தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு, இரட்சிப்பை அருளும்படி (இரட்சிப்புக்காக) இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." மறுபக்கம், அவர் அளிக்கும் இரட்சிப்பை புறந்தள்ளுவோருக்கு அழிவைக் கொண்டு வருவார். பவுல் பின்வருமாறு எழுதினார்,*

> *தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப் படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப் படத்தக்கவராயும்,*

*அவர் வரும்போது ... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:7-9).*

*எபிரெயர் 9:28 இயேசு இரட்சிக்கும்படி வருகிறாரென்று சொல்லுகிறது, 2 தெசலோனிக்கேயர் 1:7-9ல் அழிவைக் கொடுக்கும்படி கிறிஸ்து வருகிறார் என்று சொல்லுகிறது. எது சரி? கிறிஸ்து இரட்சிக்க வருகிறாரா அல்லது ஆக்கினைக்குள்ளாக்க வருகிறாரா? பதில் "இரண்டுக்குமே!" என்பதுதான். அவருக்குக் கீழ்ப்படிந்தவர்கள் அவருடைய வருகையை ஆவலோடே எதிர்பார்த்து காத்திருப்பார்கள், மற்றும் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். கீழ்ப்படியாதவர்களும் அவிசுவாசிகளும் கிறிஸ்து வரும்போது நித்திய அழிவைக் காண்பார்கள். அவரது இரண்டாம் வருகையின் விளைவும் அவரது நியாயத்தீர்ப்பின் விளைவும் ஒன்றே: சிலர் நித்திய இரட்சிப்பை அடைவார்கள், மற்றவர்கள் நித்திய இழப்பை அடைவார்கள்!*

## *முடிவுரை*

*நாம் இயேசுவை அன்பு மிக்கவராயும், இரக்கம் மிகுந்தவராயும், மன்னிக்கிற இரட்சகராகவும் மாத்திரம் பாராமல், அவரை நம்முடைய நியாயாதிபதியாகவும் பார்க்க வேண்டும்! இயேசு பிலாத்துவுக்கு முன்பாக நின்று கொண்டிருக்கையில், அவர் நியாயந்தீர்க்கப்பட்டார்; ஆனால் அவர் வரும்போது, அவரே நியாயாதிபதியாக வருவார். பிலாத்தும், இயேசுவை ஆக்கினைக்குள்ளாக்கிய யூதர்களும், மற்ற ஒவ்வொருவரும் அவராலே நியாயந்தீர்க்கப்படுவார்கள்! இயேசு இன்று வாசலருகே "நின்று கதவைத் தட்டுகிறார்" (வெளிப்படுத்தின விசேஷம் 3:20). நம்முடைய இருதயத்துக்குள்ளே வரகேட்கிறார். அவர் உலகத்தை நியாயந்தீர்க்கிற நாளிலே நியாயாதிபதியாய் செயல்படும்போது, உள்ளே வரலாமா என்று அவர் கேட்கப் போவதில்லை. அப்போது அவர் நாம் பரலோகத்துக்கா நரகத்துக்கா - எங்கே போக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பார்!*

*உங்கள் நியாயத்தீர்ப்பில் என்ன முடிவுவரும்? நியாயாதிபதியான கிறிஸ்துவுக்கு முன்பாக நீங்கள் நிற்கும்போது, அவர் உங்களிடத்தில் என்ன சொல்லுவார்? அந்தத் தீர்ப்பை தீர்மானிக்கும் நடைமுறையில் இன்று நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் கிரியைகள் நல்லவைகளாகவும், கிறிஸ்துவின் வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படியக் கூடியவராகவும் இருந்தால், தேவனுடைய கிருபையால், உங்களுக்குச் சாதகமான இறுதித் தீர்ப்பை நீங்கள் எதிர்பார்க்கலாம். அதற்கு மாறாக, நீங்கள் கீழ்ப்படியாதவராயும், விசுவாசியாதவராயுமிருந்தால், உங்கள் கிரியைகள் பொல்லாதவைகளுமாயிருந்தால் அல்லது கிறிஸ்து கோருகிற காரியங்களை செய்யாவிட்டால், நியாயாதிபதியாகிய கிறிஸ்து "நித்திய ஆக்கினைக்குள்ளாக போங்கள் என்று உங்களுக்குச் சொல்வதை எதிர்பார்க்கலாம்"!*

*நீங்கள் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையை, அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், உங்கள் நியாயத்தீர்ப்பு வேதனையுள்ளதாகத்தான் முடியும் என்றால் கிறிஸ்துவினிடம் நீங்கள் திரும்புவதன் மூலம் உங்கள் நித்திய விதியை நீங்கள் மாற்றியமைக்கலாம். கிரியைகள் நித்திய விதியை நிர்ணயம் செய்யக்கூடியதாயிருப்பதால், நற்கிரியைகள் பாவத்திற்காக ஈடு*

*செய்யப்படமாட்டாது. கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே பாவங்களை நிவர்த்தி செய்து, ஜனங்கள் இரட்சிக்கப்பட சாத்தியமாக்குகிறது. நீங்கள் அவருடைய இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட, விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் நீங்கள் அவரை அணுக வேண்டும். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள்" (நடபடிகள் 16:31), பிறகு "ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்கள் போகக் கழுவப்படுங்கள்" (நடபடிகள் 22:16)! அப்பொழுது கிருபையாய் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். ஆகையால், வருகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து நீங்கள் பயப்படுவதற்கு எதுவுமில்லை, ஆனால் அவரோடுகூட நித்திய வீட்டுக்குப்போய்ச் சேர ஆயத்தமாயிருக்கிறவர்களை இரட்சிக்க கிறிஸ்துவின் வருகைக்கு ஆவலாய் காத்திருக்கலாம்!*